**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**O.S. No. 386/2023**

**07.02.2025**

**P.W.1- அர்ச்சுணன்**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தில் கண்டுள்ளபடி பிரதிவாதிகள் அடமானம் எழுதி கொடுக்கவில்லை, ஒத்திக்கு தான் எழுதிக்கொடுக்க வந்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு தெரியாமல் பதிவு செலவுகளை தவிர்ப்பதற்காக ஒத்திக்கு பதிலாக அடமான பத்திரம் எழுதினேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் தான் உழவடை செய்து வருமானம் ஈட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள். பிரதிவாதிகள் ரூ.1,11,000 வட்டி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் காவல் நிலையத்தில் 4 மாதத்திற்குள் திரும்ப கொடுக்க எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், காவல்துறையினர் சிவில் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறித்தினார்கள் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் என்னை நேரடியாக சந்தித்து வட்டி கொடுத்து வரும்போது எதற்காக வழக்கு போடுகிறீர்கள் என கேட்டதாகவும், அதற்கு வழக்கு போட மாட்டேன் என கூறியதால், பிரதிவாதிகள் தாமதமாக பதிலறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பதிலறிவிப்பு எனது வழக்கறிஞருக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை அனுபவம் செய்து கொண்டும், வட்டியை வாங்கிக் கொண்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.
ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஒம் / R.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.